# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 02/2022** **நாள் : 09/02/2022**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்,
செயற்குழு உறுப்பினர்கள்,
அன்பான தோழரே
வணக்கம்!

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு கூட்டம்** எதிர்வரும் **2022 பிப்ரவரி 26,27** ஆகிய தேதிகளில் **திருச்சியில்** நடைபெறவுள்ளது என்ற தகவல் தோழர்களுக்கு ஏற்கனவே தெரிவித்து இருந்தோம். பொதுக்குழு அறிக்கையில் இடம் பெற, **2021, 2022 உறுப்பினர் பதிவுகளை** உடனடியாக மாநில மையத்திற்கு அனுப்பிட வேண்டும். அதே போல கேங்மேன் பணியாளர்களிடம் 2021-ம் ஆண்டு சந்தா பெற்ற எண்ணிக்கை விவரத்தை உடனடியாக எழுதி அனுப்ப வேண்டும்.

பொதுக்குழு உறுப்பினர்களான கிளைத்தலைவர், கிளை பொருளாளர், கோட்ட செயலாளர்கள் முகவரி மற்றும் வாட்ஸ்அப் எண்ணுடன் 17.02.2022-க்குள் அனுப்பிட வேண்டும்.

பொதுக்குழுவில், மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், கிளை தலைவர், கிளை பொருளாளர், கோட்டச்செயலாளர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். மாற்று ஏற்பாடுகளுக்கு அனுமதி இல்லை.

பொதுக்குழு உறுப்பினர்களுக்கான நுழைவு கட்டணம் ரூ.300/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (மாநில நிர்வாகிகள் விதிவிலக்கு) நிகழ்ச்சி நிரல் விரைவில் அனுப்பப்படும். **பொதுக்குழு முதல் நாள் 26.02.2022 காலை சரியாக 10.00 மணிக்கு துவங்கும் 27.02.2022 மாலை 5 மணிக்கு நிறைவு செய்யலாம்** எனவே அதற்கேற்ப தோழர்களின் பயண திட்டம் இருத்தல் வேண்டும்.

திருச்சி மத்திய பேருந்து நிலையம், இரயில் நிலையத்திலிருந்து வருபவர்கள், விமான நிலையம், கே.கே.நகர், கீரனூர் பொன் மலை செல்லும் பேருந்துகளில் ஏறி சுப்பிரமணியபுரம் டோல்கேட் அல்லது மன்னார்புரம் நால்ரோடு என கேட்டு இறங்கவும்.

சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து வருபவர்களும், விமான நிலையம் கே.கே.நகர் செல்லும் பேருந்துகளில் ஏறி சுப்பிரமணியபுரம் டோல்கேட் அல்லது மன்னார்புரம் நால்ரோடு என கேட்டு இறங்கவும்.

சென்னை, செங்கை, காஞ்சிபுரம், உள்ளிட்ட வடமாவட்டங்களிலிருந்து வரும் தோழர்கள் சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் சுப்பிரமணியபுரம் டோல்கேட் என கேட்டு இறங்கவும்.

தோழமையுள்ள

(எஸ்.இராஜேந்திரன்)
பொதுச்செயலாளர்

## பொதுக்குழு நடைபெறும் இடம்

காான் சாகிப்
வி.எஸ். முகமது இப்ராஹீம் ஹால்
ஜமால் முகமது கல்லூரி மசூதி அருகில்
காஜா நகர்
SE/திருச்சி, மன்னார்புரம் அலுவலகம் எதிரில்

## தொடர்புக்கு

**தோழர் எஸ்.ரங்கராஜன்,**
மாநில துணைத்தலைவர்
*9443191437, 6383715358*

**தோழர் எஸ். அகஸ்டின்,**
மண்டலச்செயலாளர் - **9344822475**

**தோழர் எஸ்.கே.செல்வராஜ்,**
திருச்சி மாநகர் கிளைச்செயலாளர் - **9442869844**

**தோழர் எம்.இருதயராஜ்,**
மாநில செயற்குழு உறுப்பினர் - **9443591588**